# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 5941/A/2024**

திரு. M. மைக்கேல்ராஜ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / உதவி
பொறியாளர், நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. M. மைக்கேல்ராஜ் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு. K.சந்தோஷ்குமார்<br>பொதுத் தகவல் அலுவலர் / உதவி பொறியாளர், நாகர்கோவில் மாநகராட்சி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 18.01.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 17.09.2011 அன்று T..பாலகிருஷ்ணன் தந்த மனு மீது நடவடிக்கை எடுத்தது தொடர்பான தகவல்கள் உட்பட 5 இனங்களில் தகவல்கள் கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | 05.02.2024 |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 08.04.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 15.07.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | 02.09.2024 |
| பிரிவு 18(1) -ன் கீழான புகார் மனு நாள் | 06.12.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு. K.சந்தோஷ்குமார், பொதுத் தகவல் அலுவலர் / உதவி பொறியாளர், நாகர்கோவில் மாநகராட்சி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 3484/2024/த.அ.உ.ச., 08.04.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், 3484/2024/த.அ.உ.ச., 02.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும், தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், மனுதாரர் இனம் 2-ல் குறிப்பிட்ட மனு அலுவலகத்தில் பெறப்படவில்லை எனவும் தெரிவித்தார். மேலும், மனுதாரரால் குறிப்பிடப்பட்ட இடத்தை நில அளவையர் உடன் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து பின்னர் தான் அது பட்டா இடம் என தெரிய வந்தததாகவும் குறிப்பிட்டு அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், உரிய தகவல் வழங்காமல், தவறான தகவல் வழங்கியதாகத் தெரிவித்தார். மனுதாரர் கோரிய இடம் புறம்போக்கு நிலமா அல்லது பட்டா நிலமா என்ற தகவல் அளிக்கவில்லை என்று தெரிவித்தார். பொதுத்தகவல் அலுவலர் அந்நிலம் பட்டா நிலம் எனக் குறிப்பிட்டபோது, தன்னிடம் அவ்விடம் புறம்போக்கு நிலம் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு சரியான தகவல் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 12.08.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை வழங்கும் நோக்கத்தில் உதவி ஆணையாளர், நாகல்கோவில் மாநகராட்சி, நாகர்கோவில் அவர்கள் தகவல்பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)இன் கீழ் நேரில் ஆய்வு செய்து, 1. அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் மனுதாரர் ஆகியோரை நேரில் அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு, உரிய ஆவண நகல்களுடன் இனம் 2 மற்றும் 5-க்கான தகவல்களை <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு***

*சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் உதவி ஆணையாளர், நாகல்கோவில் மாநகராட்சி, நாகர்கோவில் அவர்களின் விசாரணை அறிக்கையின் நகல், ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 5941/A/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பொறியாளர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 001.

**உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு:-**

உதவி ஆணையாளர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 001.

**மனுதாரர்**
திரு. M.மைக்கேல்ராஜ்
24, பாமா இல்லம்,
இராஜலிங்கம் தெரு,
இராணித்தோட்டம்,
நேசமணி நகர் அஞ்சல்,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி - 629 001.

Copy to file

KRM/PA 17.07.2026